முரசொலி

தமிழ் வார வெளியீடு....

ஆசிரியர் மு. கருணாநிதி

விலை அணா 1

Regd. No. M

முரசு 1] திருவாரூர், பெரியார் ஆண்டு 69, பங்குனி 18 (31-3-48) புதன்கிழமை [ஒலி 12

அந்த முகாமில்!

26-3-48 சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சித்தலைவர் தேர்தலின் போது காங்கிரஸ் தோழர்கள் "ஆரியம் ஒழிக! தமிழருக்குத் துரோகம் செய்யாதே" என்று பேரொலி எழுப்பினர்.

அவரது கருத்து

சூன்யம் — சூதர்கள் புளுகு

நம்முடைய நடத்தைகளை வழக்க வொழுக்கங்களாலும் நமது தாய் தந்தையர் உறவினர் சிநேகிதர் அடுத்தவர்களுடைய கூட்டுறவாலும், சம்பந்தப்பட்டு இருக்கின்றனவே யொழிய கோடி மைலுக்கப்பால் மினுக்கு மினுக்கென பிரகாசிக்கும் நட்சத்திரங்களால் ஒன்றும் ஆவதில்லை. திருஷ்டாந்தம் வேண்டுமானால் மெழுகுவத்தி ஒன்றை அடுத்த அறையில் கொளுத்தி வைத்து அதனால் நமது நடத்தையோ நடவடிக்கையோ பாதிக்கப்படுகிறதா என்று பாருங்கள்! இல்லையானால் அதே வெளிச்சத்தைத் தரும் நட்சத்திரங்களால் நமது நடத்தை பாதிக்கப்படுவது என்ன நிச்சயம்?

அதே மாதிரி அடுத்த வீட்டுக்காரன் கோழி இறைச்சியையும், தவளை இறைச்சியையும் தின்பது நமது வீட்டுப் பிள்ளைகளுடைய சுகத்தை எப்படிப் பாதிக்கும்? அது போலவே சுடுகாட்டு எலும்புகளும், மனிதனுடைய பெருவிரலும் குரங்கு நகங்களும் அடுத்த வீட்டுக்காரன் குழந்தையின் சுகத்தை எப்படிக் கொடுக்கும்? ஆதலின் சூனியத்தால் ஒருவனை கொல்வதாவது கோயில் விழச் செய்வதாவது குதிரைக்குக் கொம்பு முளைத்தது என்று கேட்பதையே ஒக்கும்.

முதலில் பிள்ளையின் பெருவிரலாலும், ஒணான் பல்லி வால் துண்டுகளாலும், ஆமை ஓட்டாலும், தவளை, தேரையாலும், ஒருவனை சாகவைக்கக் கூடுமானால், சண்டைக்கு சேனைகளேன்? அம்பு வில் ஏன்? குண்டு துப்பாக்கிகளேன்? இரண்டொரு செத்துப்போன ஒணான், எளிய குழந்தைகளின் பெருவிரல்களை கொண்டு சில மந்திரத்தைச் சொல்லி சேனைத் தலைவனை "அழித்து" விடலாமே? மெழுகுவத்தி வெளிச்சத்தால் நமது நல்ல நடவடிக்கையோ, அல்லது கெட்ட நடவடிக்கையோ சரிப்படுத்தப்பட்டால் (Regulated) ஏன் ஒவ்வொரு சிறுவன் சிறுமியை மெழுகுவத்தியாலேயே திருந்தவைக்கலாமே! இது ஆபாசமான விஷயமென்றால் மெழுகு வத்திக்கும் மிக கேவல வெளிச்சத்தைக் கொடுக்கும் ஒரு நட்சத்திரத்தால் நமது நடவடிக்கை ஆளப்படுமென்பது என் ஆபாசவார்த்தை ஆகாது? ஆதலின் பில்லி, சூனியாதிகளும், சோதிடமும், எண்களும் (Numbers) மந்திர தந்திரங்களும் சில மோசக்காரர் ஜீவனம் செய்து பிழைக்க ஏற்பட்ட சூழ்ச்சிகளே யொழிய அவ்வித்தைகளில் யாதாமொரு உண்மையுமில்லையென அறிக.

(M. சிங்காரவேலு)

★

வெற்றிவீரர் ஓமந்தூரார்! ஆனாலும் வடநாட்டுக்கு அடிமை!

சேரன் செங்குட்டுவன் அசுரன்?

தீட்சிதரின் இன உணர்ச்சி.

(மணியொலி)

இராமாயண — பாரதங்களில் அசுரர் என்றும் இராக்கதரென்றும் கூறப் பெறுபவர்கள் நந் தமிழ்நாட்டுத் திராவிடரேயென, பன்னெடுங் காலமாக நம் பெரும் பெரியார் கூறி வருகின்றார். இதனை நம் நாட்டு மூதறிஞர் எனத் தம்மை நினைக்கின்ற பெரியவர்கள் ஒப்புக்கொண்டு அவ் விதிகாசங்களை ஒழிக்க விரும்புவதுமில்லை, வெறுப்பாரையும் வறிதே விடுவதுமில்லை, மாறாக, "செவியுணவிற் கேள்வியிலா மக்களென வைது வருகின்றனர். அவர்களுக்கு இக் கருத்துரையை அன்பளிப்பாகத் தருகின்றேன்.

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்திற்கு இருக்கும்முன்னோருரையைபல்லோரறிய முடியாமையின், எளியருமுணரும் பெற்றிக்காக, தற்போதைய நிதிமந்திரி ஆர். கே. சண்முகம் அவர்கள், காப்பிய காண்டம் மூன்றனுள் முதலாவதாகிய 'புகார்' காண்டத்திற்கு உரையெழுதியுள்ளார். அதற்கு 'முகவுரை' என்ற இலக்கணத்திற்கு மாறாக அமைந்துள்ள, தமிழாராய்ச்சித் துறைத் தலைவரெனத் தருக்கித் திரியும் திருவாளர் எஸ். வையாபுரி பிள்ளையவர்களின் 'முகவுரை'யும்; உரையாசிரியரின் அறிவின் திறங்கண்டு வியக்க விரும்பாத ஸ்ரீ வி. ஆர். ஆர். தீட்சிதர் அவர்களின் மதிப்புரையும் உண்டு. அவற்றில் 'மதிப்புரையில் தீட்சிதருக்கு மதிப்புரையோடிய காரணததால்' எழுதிய கருத்துரை பின்வருமாறுள்ளது.

"பழையபனை வேம்பினைச் செங்குட்டுவன் தடிந்த காலத்து அவன்றன் மகளிர் தலைமயிரான் முறுக்கிய கயிற்றானே அம்மரத்தினை யிழுக்கச் செய்தான்...... பத்தினிக் கடவுளைப் பிரதிட்டிக்கக் கொண்டுவந்த இமயக்கல்லை வடநாட்டு வேந்தர் தம் முடித்தலை நெரிய ஏற்றிக் கொணர்ந்தனன்......... இவற்றால் தீங்கு செய்த பகைவரிடத்து இரக்கங் காட்டாமல் இருந்தான் என்பதே போதரும். இந் நிகழ்ச்சிகள் கௌடில்யர் தம் அருத்த சாத்திரத்துச் சிறக்கக் கூறியுள்ள அவுணத் தன்மைகளின் விளைவுகளையன்றி வேறல்ல"

(மதிப்புரை—பக்கம் 38, 39)

சிலப்பதிகாரமெனும் செழுந்தமிழ்க் காவியத்திற்கு உரையெழுதியவர் ஒரு திராவிடர். அவருரையில், மதிப்புரை என்ற பெயரில் மானங்கெட வாழா மரபில்வந்த சேரன் செங்குட்டுவன் செய்த வீறுடைச்செயல்கள் அவுணத் தன்மைகளின்— அஃதாவது அசுரகுணத்தின் விளைவுகள் என்று தீட்சிதர் தீட்டிவிட்டார். தமது மூதாதை வழிவந்த ஆரியக் கனகவிசயரின் பெயரை வெளியிட்டெழுத மனம் பொறாத ஆரியர், அவர்களை வடநாட்டு வேந்தரெனச் சுட்டுகின்றார். திராவிடனின் தனிப் புகழை நிலைநாட்ட உள்ள காப்பியங்களுள் முத்தமிழ்க் காப்பியமான ஒப்பற்ற காப்பியத்திற்கு மதிப்புரை தரவந்த ஆரியர் தம்மினப் பற்றின் விசேடத்தால் கௌடில்யர் அருத்த சாத்திரத்தில் பொருத்தமின்றி செங்குட்டுவன் குணத்திற்கு ஆதாரந் தேடுகின்றார்.

திராவிடனின் நிலை அவ்வளவு இரங்கத்தக்க நிலைக்கு வந்துவிட்டதென்பதையே இது காட்டுகிறது. 'ஒரு தமிழ் நூலுக்கு முகவுரையோ, மதிப்புரையோ பெற வேண்டுமானால், நல்ல தமிழறிந்த ஒரு திராவிடரிடம் வாங்கவேண்டுமே யல்லாது, மற்றவரிடம் வாங்கும் சிறப்புரைகள் வெற்றுரையாகவும், கட்டுரையாகவும், மாற்றுரையாகவும் இருக்குமேயன்றிச் சிறப்புரையாக இருக்குமா? ஆகவேதான் மங்கல வழக்கான் தமிழாராய்ச்சித் துறைத் தலைவராயிருப்பவர் தந்த முகவுரையிலும் பல ஆராய்வின்றி யெழுதியுள்ள தெளிவில்லுரைகளும் மல்கியுள்ளன. அது பற்றிப் பின்னர் மற்றொரு கட்டுரையில் விவரிக்கின்றேன். ஆரியர் ஒருவரின் மதிப்புரை பெற்றால் அந்நூல் இத் திராவிடத்தில் மங்காப் புகழ்கொண்டு நின்று நிலவுமென்ற காரணத்தாலோ, என்னவோ, தீட்சிதர் மதிப்புரை புகார்காண்ட உரைச்சுவடியில் இடம் பெற்றுவிட்டது. அவ்வுரையாசிரியரையும் கடைசியொரு விடத்தில் சுட்டியதோடு தம் நீண்ட மதிப்புரையை முடித்துக் கொள்கிறார். அது புகார் காண்டமாதலால், இத்தகு 'புகார்' (வழக்கு) உண்டாக ஏதுவாயிற்றென்னலாம்.

(3-ம் பக்கம் பார்க்க)

சுவை குறையா சிற்றுண்டிக்கு விசயபுரம் 'பீம விலாஸ்' சிறந்தது.

மீண்டும் கொலைக்களம்!

லட்சக்கணக்கான வீரர்களைப் பிணங்களாக்கி விட்டு—பச்சிளங் குழந்தைகள், பருவ மங்கையர் உயிர்களைப் பதைக்கப் பதைக்கக் குடித்து விட்டு-கோடிக்கணக்கான தாய்மார்கள் கோவெனக் கதற அந்தக் குமுறல் கண்டு குறுஞ் சிரிப்பு சிரித்துவிட்டு—விதவைகளை அதிகமாக்கி அவர்கள் வேதனை கண்டு விலா நோக நகைத்து...... முசோலினியின் இரும்பு நெஞ்சத்தைக் கீறி ருசி பார்த்து, இட்லரின் வாழ்வை முடித்து, கோயரிங்குக்கு விஷக் கோப்பை யளித்து அவன் சதையை விருந்தாக்கிக்கொண்டு ஹிரோஷிமாவை வெறி நாக்குகளால் சுரண்டிச் சுவைத்து, ரத்தச் சேற்றில்......எலும்புகளை சொருகி விளையாடிய யுத்தம் ......அமைதியென்னும் திரை மறைவில் அதிக நாள் இருக்க முடியாமல் 'இதோ வந்தேன் வந்தேன்' என கோர கீதம் இசைக்கிறது.

மீண்டும் போரா? என உலகம் திடுக்கிடுகிறது. இந்தப் போரில் ஏற்பட்ட காயம் காய்வதற்குள்ளாகவா மீண்டும் ஒரு போர்? மண்டைப்புண் ஆறுவதற்கு முன்பு மற்றுமொரு போரா? சீரழிந்த வாழ்வு செப்பனிடப்படுவதற்கு முன் போர் முரசா? 'ஆமாம் போர்தான்!' என்கிறார்; ட்ரூமன்! அவரது பேச்சிலே அலட்சியம் சிந்துகிறது. மக்களின் வாழ்வு மாய்க்கப்படுவதைக் கண்டு மனக்கவலைப் படாத முதலாளித்துவ மரபு அவர்! 'உம்'-என்றால் உலகத்தையே உலுக்கிவிடத்தக்க அணுகுண்டு தம்மிடமிருக்கிறதென்ற தருக்குமிக்கோர் நாட்டுத்தலைவர். அணுகுண்டுக்கு பதில் குண்டு எம்மிடமும் உண்டு என முரசொலிக்கிறது ரஷ்யா: ஆயுதச் சாலைகளை நிரப்பும் விஷயத்தில் அக்கறை செலுத்துகின்ற நாடுகள்......... போர் முகாம்களை அமைப்பது பற்றி திட்டம் தீட்டுகிற நாடுகள்......வரும் யுத்த காண்டத்தில் நடு நிலைமையா?......நடுக்க நிலைமையா என்று தீர்மானித்துக் கொள்ளாத நாடுகள்...... இதுதான் இன்றைய உலகம்.

அமெரிக்க டாங்கிகள் ரஷ்யா—வுக்கு செல்கின்றன அதைத் தடுக்க அவசர நடவடிக்கை என்ற செய்திகளைக் காணும் பொழுதும், அமெரிக்கா அணுகுண்டு தயாரிப்பில் அதிக மும்முரமாக ஈடுபட்டு 30 முதல் 500 அணுகுண்டுகள் வரை தயாரிக்க மூலப்பொருள்கள் இருக்கின்றனவென்று கணக்கிட்டுச் சொல்லும் பொழுதும், அணுசக்தி சம்பந்தமாக சர்வதேசக் கட்டுப்பாடு ஏற்படுவதை அமெரிக்காவும் பிரிட்டனும் தடுக்கின்றன என்று ரஷ்ய பிரதிநிதி கிராமிகோ கண்டித்துப் பேசியதோடு, அமெரிக்காவின் போக்கைக் கவனித்தால் உலகத்தில் சமாதானத்தை நிலைநாட்ட முடியாது என்று குறிப்பிட்டதையும் கூர்ந்து பார்க்கும் பொழுதும், கொரியாவில் சோவியத் மண்டலத்திலுள்ள சோவியத்-யு-எஸ் எல்லை நெடுக அகழ் வெட்டி நிலயங்கள் அமைப்பதைக் கேள்விப்படும் பொழுதும்

(6-ம் பக்கம் பார்க்க)

(2-ம் பக்க தொடர்ச்சி)

ஆகவே, இதிலிருந்தாவது, ஆரியர் எவரும் எந்தவிடத்தில் நுழைய இடங் கிடைத்தாலும் தம்மின வளர்ச்சிக்கு வழி தேடுவதும், தம் பகை வெறுப்பதும் ஆன தொழிலில் வல்லவர் என்பதை இக்கண்மூடித் திராவிடர் உணரட்டும்.

தம்மின வளர்ச்சி கௌடில்யர் அருத்த சாத்திரத்தைக் குறிப்பிடுவதாலும், வடநாட்டு வேந்தரான ஆரியக் கனகவிசயரை மறைப்பதாலும்! தம் பகை வெறுத்தல் சேரன் செங்குட்டுவன் வீரச்செயல் அசுரகுணத்தின் விளைவு என எடுத்தோதுவதாலும் ஆரியர் தம் செயல் நன்கு புலப்படுகிறதென்னும் துணிவுடையேன்.

திராவிடர்களை அசுரர் என்றழைக்க மறவாத ஆரியர் உள்ள நாட்டில், தன்னைத் திராவிடன் என்று சொல்லிக்கொள்ள அஞ்சியஞ்சிச் சாகும் மறத் திராவிடா! இதனை எண்ணிப்பார். ஆரியக் கனகவிசயரை-வடவேந்தரென்று பொதுவாய் மூடிவிட்டழைப்பதிலும், காந்தியாரைக் கொன்ற பார்ப்பன கோத்சேயை—ஒரு மராத்திய இந்துவென்று மூடிவிட்டு முடிவதிலும் என்ன பேதங்கண்டாய்! இதனை எண்ணிப் பார்க்குமளவுக்கு உனதறிவு விரிவடையாவிடின், எண்ணிக் கூறுவாரை இகழாதே திராவிடா! ஒதுங்கி நில்!

முரசொலி
ஆண்டு சந்தா 4-ரூபாய்
தனிபிரதி 1-அணா
முரசொலி அலுவலகம்
திருவாரூர்

திருவாரூர் பிரபாத்தில் 'கன்னிகா' 5-வது வாரம்

முரசொலி

பெரியார் ஆண்டு 69. பங்குனி 18
புதன் 31—3—48

விழலுக்கு நீர் இறைத்து...

'அடடா! என்ன அழகு!... சிற்பியின் சிந்தனையையும் சிதறடிக்கும் எழில் மண்டபம்...... அதிலிருந்த வர்ண சித்திரங்கள் .... அப்பப்ப! கண்ணைப் பறித்துக்கொண்டு போயின. அங்கே கிடந்த ஒரு மரகதக் கட்டிலில் தங்கச் சிலையோவென அவள் இருந்தாள். அவள் குளிர்ந்த பார்வையை, முந்திக்கொண்டு, வெடித்த பாளையோவென அரும்புப் பற்கள் தெரிய, குறுஞ் சிரிப்புடன் மெதுவாக "மதனனே வா!" என்று குயில் குரலுடன், வீணையொலியோவென நெஞ்சம் கொள்ளைபோக அவள் அழைத்த பாங்கு...... அந்தக் கடைக்கண் பார்வை... அப்படியே என்னை சொக்க வைத்தது. மதுவுண்ட மனிதனான தப்பா என்னை...என் உள்ளத்திலே ஓரே உற்சாகம், துடிதுடிப்பு...என் கால்கள் பர பர வென எடுத்து அடிவைத்தன. கிட்ட நெருங்கி, கண்ணாடிக்கன்னத்தை என்கையால் தொட்டு...' என்று ஒருவர் கூற, பக்கத்திலிருப்பவர் சுவாரஸ்யம் கொப்பளிக்க முப்பத்திரண்டு பல்லும் தெரிய "பின் என்ன?" என்று கேட்கும் பொழுது, பரிதாபத்துடன் சோகரசம் கலக்க, குரல் கம்ம, வேதனை விம்ம "பின என்ன? திடீரென நான் விழித்துக் கொண்டேன்" என்று மங்கையையும் மாளிகையையும் வர்ணித்தவர் பதில் கூறுகிற 'பரிதாபத்துக்குரிய நிலையை ஒத்துவிட்டது இன்றைய காங்கிரஸ் தோழர்கள் நிலை......

* * *

"உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்" என்ற பாட்டை ஆத்திரத்துடனும் "அச்சமில்லை" என்ற அடியை ஆங்காரமும் ஓங்காரமும் கலந்த உரத்த குரலில் எழுப்பி, முழக்கிய காங்கிரஸ் நண்பர்களின் உண்மைத் தொண்டர்களின்— 'வீர சுருதி' காலரைக்கட்டையிலிருந்து அரைக் கட்டையாகக் குறைந்து விட்டது, குறைந்து போய்க்கொண்டுமிருக்கிறது! காரணம்; "அன்னிய ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு இரையாகாதே!" "ஆங்கிலப் பிடியை அகற்ற ஓடிவா!" "பதவிப் பேய் பிடித்தலையும் சகோதரத் துரோகி ஒழிக" என்றெல்லாம் சுதந்திரம் என்ற ஓரே நோக்கமுடன் பெருங்குரல் எழுப்பிய காங்கிரஸ் நண்பர்கள் நிலை, கனவிலே கட்டிளம் பெண்ணைக் கண்டு, அவள் மேனி மினுக்கு ஒய்யாரக் கொண்டை, உள்ளங்கவர் உருவம் ஆகியவைகளில் லயித்துக்கிடந்துவிட்டு, கண்ணை விழித்துப் பார்க்கும் போது எதுவுமே இல்லாததைக் கண்டு திகைக்கும் மனிதனை யொத்து இருக்கிறது.

எண்ணினர், தங்களிடம் 'சுயராஜ்யம் வந்ததும் சுகராஜ்யம் வந்துவிடும்' என்று தலைவர்கள் கூறியபொழுது, உண்மையில் நாமும் நாடும் எந்தவிதமான கேடுபாடின்றி எப்பொழுதும் சுகமுடன் வாழலாமென்று! ஆனால் ....? வாழ்க்கை நிலையின் தொல்லையோ, பசி பசி என்ற பதறலோ, பறந்துவிடவில்லை வெள்ளையரோடு சுதந்திரம் வந்ததாகக் கூறியபின் எங்கும் பட்டினி, பசி, துன்பம், இல்லாமை, ஏழ்மை, பரிதவிப்பு இன்னபிற இன்னல்களைக் காணும் பொழுது உள்ளபடியே நல்வாழ்வைக் கனவுகண்ட நண்பர்களின் உள்ளத்தில் ஒரு மூலையில் "இதற்குத்தானா இத்தனை பாடுபட்டோம்?" என்றெண்ணம் உதிப்பதில் ஆச்சரியமில்லை— இருக்கவும் முடியாது. அத்துடன், லட்சிய புருஷர்கள் தியாக வீரர்கள், நாட்டிற்காக உடல், பொருள், ஆவியையும் தத்தம் செய்பவர்கள் அடங்கிய; ஏழைகள் இன்னலை ஒழிப்பதே கடமையாகக்கொண்ட, நாட்டில் சாதிபேதம் சண்டாளத்தனம் இல்லாது செய்வதென்பதே லட்சியமெனக் கூறிய காங்கிரஸ் ஓட்டை வண்டியாக, உளுத்துப் போனஉத்திரமாக, இருப்பதைக் காண உள்ளபடியே அவர்கள் வருந்தத்தான் செய்வார்கள்.

"நாடாள வந்தோம், மக்களின் வாழ்வை நல்வாழ்வுப்படுத்த வந்தோம்" என்ற எண்ணம் நெஞ்சிலேயிருப்பதற்குப் பதில் பதவி வெறியும், அதற்காக எல்லாவற்றையும் தத்தம் செய்து விட்டாவது பதவி மேடையைப் பெற வேண்டும் என்ற பேராசையுமே காங்கிரஸ் தலைவர்கள் என்று கூறப்படுவோரின் வாழ்க்கை லட்சியமாகி விட்டது.

பிரகாசம் வீழ்ச்சிப்படலம் தொடங்கி ஓமாந்தூர் ஆட்சிப் படலத்தை முடிவுகட்டும் முயற்சிப்படலம் வரையில், ஓரிரு ஆண்டுகளுக்குள் ஓரே கட்சிக்

வெய்யிலை மறைக்க முழத் துண்டுமின்றி வாடுகையில்......

குள் பிளவுகள்—அது மட்டுமல்ல பெரிய பெரிய தகராறுகள், சண்டைகள் வளருமளவுக்கு காங்கிரஸ் புராணத்தின் படலங்கள் ரசாபாசமாகிவிட்டன.

“ஸ்ரீ வைத்திநாத ஐயர் போன்றவர்கள் வகுப்பு உணர்ச்சியினாலும், வேறு சிலர், மந்திரிப்பதவி மோகத்தினாலும்..............”

என்று சாட்சாத் சொக்கலிங்கம் ‘தினசரி’ ஆசிரியர் அவர்கள் தீட்ட, சட்டசபையைநோக்கிச் செல்வோரைத் தேர்ந்தெடுக்கும் முறையை ‘வருடாந்திர ஏலம்’ என்று ‘பாரததேவி’ பரிகாசப் பாட்டாக பாட, நாட்டிலுள்ளோர் நல்ல நாடகத்தைக் காணும்பொழுது “அடுத்தகட்டம் என்ன?” என்று ஆவல் ததும்புவது போல் — சர்க்கஸ் வித்தையில், கூடையை —மூடியவுடன் மாங்காய் முளைத்ததா? என்ன மாங்காய்?’ என்பதை அறிய குனிந்து குனிந்து பார்க்கும் ஆசையுள்ளவனைப்போல—‘இன்று என்ன செய்தி?’ ‘யாரப்பா மந்திரியாம்’ என்று கேட்கும்—இல்லை வேடிக்கை நிகழ்ச்சியாக எண்ணும்—அளவுக்கு நிலைமையேற்பட்டுவிட்டது. இந்த சீர்கெட்ட நிலைமை, சந்திசிரிக்கும் நிலைமை தலைவர்களென்போரின் பதவி வேட்டையில் காணும்பொழுது ‘லட்சியம்’ என்று கூறிக்கொண்டு உழைத்து அலுத்த காங்கிரஸ் தொண்டரின் உள்ளம் கஷ்டப்படத்தான் செய்யும், ‘விழலுக்காக நீர் இறைத்தோம்’ என்றும் வேதனைப்படத்தான் செய்யும்!

கட்சியின் அமைப்பே முதலாளித்தத்துவ சாக்கடையின் மூடியாக, ஏகாதிபத்திய முரசமாக இருக்கும்பொழுது சந்திசிரிக்கும் ‘கட்டங்கள்’ ஏற்படத்தானே செய்யும்.

“ஒரு கட்சி, அரசியல் ஆதிபத்தியம் பெறும்பொழுது, அக்கட்சியின் அடிப்பீடம் சரியில்லாவிட்டால் முதலாளிகளால், சுயநலமிகளால் சூழப்பட்டு அவர்கட்கே அடிமையாகிவிடும்” என்ற மார்க்ஸ் சித்தாந்தம் புரிந்த நாம் இந்த ‘சந்திசிரிக்கும் கட்டத்தை’ எதிர்பார்த்தவர்கள்தான்.

இதைக் காணும் பொழுது தலைதாழ்ந்து சுருதி குறைந்து, வேதனைப்படும் காங்கிரஸ், தொண்டர்கள தங்கள் காங்கிரஸ் பக்தி’யை ஒருபுறம் ஒதுக்கி சிந்தனைக்கு வேலை கொடுப்பார்களேயானால் காங்கிரஸ், பண மூட்டைகளின் சல்லாபக் கருவியாக, வடபாதிமங்கலம், நாடிமுத்துக்களின் வாட்டந்தீர்க்கும் பூஞ்சோலையாக, வைத்திநாத அய்யர்களின் வம்பு மடமாக இருப்பது நன்கு தெரியவரும். அதுபோது உண்மையாகவே அவர்கள் இதயங்கள் ‘விழலுக்கு நீரிறைத்து ஓய மாட்டோம்’ என்ற வார்த்தைகளை வேதனை கீதமாக்கத் தொடங்கும்!

★

பிடி சாபம்!

“இனி தமிழ்நாடு வாழாது; வாழ்ந்தாலும் அது தமிழனுக்காக வாழாது. தமிழர்கள் இனி வாழமாட்டார்கள் வாழ்ந்தாலும் தமிழனாக வாழமாட்டார்கள்”

“தமிழ்நாடு” கடைசி இதழில் திரு. சோமசுந்தர பாரதியார் அவர்கள் இப்படி தமிழ்நாட்டை வாழ்த்தியிருக்கிறார்.

சுவைத்ததில்...!

தொழிலாளி:—கோலார். அச்சமற்ற நடை. அழுத்தந் திருத்தமான எண்ணம். ஆசிரியர் A. இரத்தினசபாபதி.

நவீனம்:—வேப்பேரி சென்னை தோழர்கள் நாகை பாலசுப்பிரமணியம், D. S. வேலன் ஆகியோரின் தொடர்கதைகளுடன் வெளிவரும் சுவைமிக்க நாவல் புத்தகம்.

சுதந்திரத் தமிழன்:—மதுரை. சுதந்திர இந்தியாவில் சுதந்திரத் தமிழகம் இந்தப் பத்திரிகையின் குறிக்கோள். ஆசிரியத் தொழிலில் அனுபவமிக்க தோழர் மு. கணபதி இதன் ஆசிரியர்.

திராவிடன் பொங்கல் மலர்:—மலர் கிடைக்காது! பொங்கல் மலர் திராவிடரின் பொன்மலராய் விளங்குகிறது. தோழர் என். வி. நடராசன் அவர்களின் பெரு முயற்சியால் நாட்டுக்குக் கிடைத்த பரிசு அது!

இனமணி.—P O/82. சுப்போ, மலேயா. இனமணியே தான்! தூங்குகிற தோழருக்கு காலமுணர்த்தி கடமை செய்யத் தூண்டும் இந்த மணி ஒலிக்கட்டும்! ஒலிக்கட்டும்! ஆசிரியர் த. வ. மு. மகாலிங்கம்.

வரப்பெற்றோம்:—

திராவிடன் பதிப்பக காலண்டர்:—தலைவர்களின் வண்ணப் படங்கள். திராவிடத்திற்கு திராவிடன் பதிப்பகத்தார் செய்துவரும் தொண்டுக்கு இந்த முயற்சி சிகாம் வைக்கிறது.

வேங்கடத்துப் பெருமானே! உனக்கு வைர முடி ஒருகேடா?

மீண்டும் கொலைக்களம்!

[3-ம் பக்க தொடர்ச்சி]

மால்டாவில் பெரிய அமெரிக்க கடற்படை தளமும், விமானதளமும் அமைக்க அத்தீவை பிரிட்டன் அமெரிக்காவிடம் ஒப்படைத்து விட்டதை நியூயார்க் 'யுனைடெட் ஸ்டேட்ஸ் நியூஸ்' என்ற பத்திரிகை கூறும் பொழுதும், யுத்தத்தைவிட அடிமை வாழ்வு மிக மோசம் என தொழிலாளர் தோளில் நின்றுகொண்டு அமெரிக்க ஜனாதிபதி ட்ருமன் விடுதலை விருத்தம் பாடும்பொழுதும், ஏற்கனவேயுள்ள விமான பாதுகாப்பு தங்குமிடங்களை அழித்துவிட வேண்டாமென்றும், அவைகளை நல்ல நிலையில் வைத்துக்கொள்ளும் படிக்கும் டேனிஷ் சர்க்கார் உத்திரவு பிறப்பித்து, ராணுவத்தினரின் ஓட்வையும் ரத்து செய்துவிட்ட அபாய அறிவிப்பு சங்கநாதம் நம் காதில் விழும் பொழுதும், போர் மிக விரைவில் வந்துகொண்டிருக்கிறது என நம்பத்தான் வேண்டும்.

இந்தப் போர்முனையில் அமெரிக்காவும் பிரிட்டனும் தோளோடு தோள் சேர்த்து ரஷ்யாவைத் தொலைத்துவிட கங்கணம் கட்டும். இட்லரிடம் எறிந்த சட்டியை இரத்தம் காய்வதற்குள் ரஷ்யா கையில் எடுக்க நேரிடும். நாசிசத்தை ஒழிக்க சேர்ந்து நின்ற பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா மூன்று நாடுகளும் பிரிந்து நின்று அமைதிக்கு சமாதிகட்ட மீசை முறுக்குகின்றன.

இம்சையை ஒழிக்க உபதேசித்த இயேசு நாதரின் பக்த கோடிகள் இரத்தக் கடலில் நீச்சல் விளையாட்டு நடத்த விரும்புகிறார்கள்.

'சிரமறுத்தல் வேந்தனுக்கு பொழுதுபோக்கு, நமக்கெல்லாம் உயிரின் வாதை...' என்ற அளவிலே பாதுகாப்பில் பத்திரமாக அமர்ந்துகொண்டு .....' படையெடுப்போம் பாரினை யழிப்போம்!' என வீரவுரை யாற்றுகிறார்கள் தலைவர்கள்.

சன்மார்க்க மதம் —சமரச சற்குண வழிகாட்டி—சர்வதேச சங்கம் இத்தனையு மிருந்தும் சமர்! வெட்கமும் வேதனையும் கலந்த நிலைமை.

இந்த சங்கடத்தை முளையிலேயே கிள்ள வேண்டுமானால் ஸ்டாலின், ட்ருமன், அட்லி சந்திப்பு நடைபெற வேண்டும், அல்லது ட்ருமன் ஜனாதிபதி பீடத்திலிருந்து இறக்கப்பட வேண்டும், ஜார்ஜ் மார்ஷல் அமெரிக்க ராஜாங்க இலாக்காவிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும், என்கின்ற யோசனைகளை பலர் எச்சரித்துக் கூறுகிறார்கள். ரத்தவெறி பிடித்தவர் இந்தயோசனைகளுக்குசெவிமடுக்கவே மாட்டார்கள். போர் வரத்தான் போகிறது. எரிமலை குமுறுகிறது, இன்னும் சற்று நேரத்தில் நெருப்புக் குழம்பு வாரி வாரி இறைக்கப்படும்.

அப்போது இந்தியாவின் நிலை என்ன? 'பாகிஸ்தானுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொள்ள தயங்க மாட்டோம்' என பண்டித நேரு கூறுவது மட்டும் நம்மைப் பரவசப்படுத்தி விடாது இந்துஸ்தான் ஆட்சி போகும் போக்கைப் பார்த்தால். அமெரிக்கா பிரிட்டன் ஆகிய நாடுகளை அணைத்துக்கொண்டு ...பலமில்லா விட்டாலும் ரஷ்யாவை பரிகாச மொழிகளால் எதிர்க்கும் நிலைமை ஏற்படலாம் என எண்ண வேண்டியிருக்கிறது.

இந்துஸ்தான் சிறு குழந்தை! ......தவழும் பருவங்கூட வரவில்லை, அதிலும் பலஹீனமான சிசு! சிசுஹத்தி செய்துவிட வேண்டாம் என்று எச்சரிக்கிறோம்; ஆட்சியாளர் திட்டம் திராவிடத்தையும் பாதிக்கும் என்ற கவலையோடு!

★

எதிரொலி

பாகிஸ்தான் ஏற்பட்டு பெற்றுவிட்டபடியால், முஸ்லிம் லீகின் வேலை முடிவடைந்து விட்டதென்றும் ஏழை பாட்டாளி மக்களின் முன்னேற்றத்துக்கான முற்போக்குக் கட்சிகளே இனி தேவையென்றும் 'எல்லைப் புற 'குடை கிட்மாட்கர் தலைவர் கான் அப்துல் கபார்கான் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு விடுதலை கிடைத்து விட்டபடியால் காங்கிரசின் வேலை முடிந்துவிட்டதென்றும் பாட்டாளி மக்களின் இழிவு போக்கும் கட்சியே இனி தேவையென்ற எதிரொலி.... விந்தியத்தில் கிளம்புகிறது. கபார்கானின் குரலில்லை! காலத்தோடு போராடும் ஏழைகளின் மெலிந்த குரலில்!

★ ★

விற்பனையாளருக்கும் வாசகர்கட்கும்!

முரசொலி அச்சிடவேண்டிய தாள் வாராததால் இந்தத் தாளில் அச்சியற்ற வேண்டியும், தங்களுக்கு தாமதமாக கிடைக்கும்படியும் ஏற்பட்டுவிட்டது. வரும் வாரம் முதல் பத்திரிகை புதன்கிழமை யன்றே கிடைக்கும்.

நிர்வாகி, முரசொலி

ஓடி வந்த இந்திப் பெண்ணே, கேள்! நீ...

செத்தார்க்கு மாரடிக்கும் உலகே!

(ரவி)

சிக்குப்பிடித்த தலை, மானம் மறைக்கா நிலையிலுள்ள அழுக்கேறிய கந்தல் இடையிலே. மட்டையைப் போன்று காய்ந்து வற்றிய உடல். மண்டையோட்டிலே பதுங்கிக் கிடக்கின்ற கண்கள் ஒளியின்றி உருளுகின்றன. அந்த வாழ்வின் அந்திநிலையை எட்டிப்பார்க்கும் உயிர். தோளிலே வறுமையின் சிகரத்தில் தவழும் சிசு, முட்களொத்த காலுடனும் கையுடனும் கூடிய அச் சிசுவின் உடலெலும்புகளை ஒவ்வொன்றாக எண்ணிவிடலாம்........

பாழடைந்த வயிற்றிலே பசி-ஒட்டிய உடலிலே உயிர் ஊசலாடிய காரணத்தால்! கற்பைக் காசுக்கு விற்று மாசுபடிந்த மனிதர் வாழும் இம் மண்ணில் பசியைத் தணித்துக் கொள்ளலாம் என அவள் எண்ணினால் கூட முடியாது. ஏன்? அவள் உடலிலே அழகு இல்லை என்பது மட்டுமல்ல—வலிமையும் கிடையாது......என்ன செய்வாள்?

அவளுடைய சொத்து பாலின்றி பரிதவிக்கும் பாலகன்—ஒரு நாள் இரவினிலே எங்கோ......யாரோ தந்த...... காசுக்காக ஈந்த...காதலின்பத்தின்......இல்லை இல்லை...காம போதையின் வடிவம்......

வறுமையின் உச்சத்திலே வாடிய அவளுக்குப் பசிக்காதா என்ன? பிச்சை எடுத்தாள்...... கொடுப்பார் யார்?.........ஆம் அவளுக்குத் தந்தார்கள்........ "மூதேவி...உழைத்துத் தின்ன என்ன......உனக்குப் பிள்ளை வேறேயா ......காலங்காத்தாலே வந்து கத்திகிட்டு இருக்கியே.... சீ நாயே..." என்ற வசவுகளை...!

கூவினாள் "பிள்ளையோ பிள்ளை யென்று" "தயிரோ தயிர்" என்று கூவித் தயிர் விற்கும் தங்கம்மாளின் பாணியிலே...! தயிர் ....வாங்க ஆளுண்டு......ஆனால் பிள்ளைவாங்க.......... ஒவ்வொரு வீட்டின் படியிலேறிக் கேட்டாள் பாலகன் வேண்டுமா என்று.........பதில் தந்தார்கள் அவள் புண்பட்ட இதயத்திலே சொல் ஈட்டிகளைப் பாய்ச்சி. பசியோ உயிரைக் கவ்வுகிறது ஏழையுயிரைக் கசக்கி வடிக்கும் முதலாளியைப்போல! 'பசிவந்திடப் பத்தும் பறந்துபோம்' என்ற பாவலன்' பாரின் தன்மையை அறிந்தவனாகத்தான் இருத்தல் வேண்டும்...

சந்திரோதயத்தின் காந்தியிலே கொப்பளித்துக் குமுறுங் கடல் போல பசியின் எழுச்சியில் இதயத்தில் எழுந்த போராட்டம்......முடிந்தது... முடிவுக்கு வந்தாள்.

பாழ் கிணறு அல்ல அது.. கிராமத்தாருக்குப் பயனளிக்கும் கிணறு......பக்கத்தில் வந்து நின்றாள் பாவை பாலகனுடன! கூடிய கூட்டத்தை நோக்கிக் கெஞ்சினாள்; பாலகனைப் பணங் கொடுத்து யாராகிலும் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று.

ஏழை சொல் எங்குசெல்லும்! ...பாலகனுக்குப் பாவை கேட்டது பத்தாயிரம் பொற்காசுகள் அல்ல...என் பத்துப் பணங் கூட அல்ல...எட்டணா...செல்வன் தன் நாய்க்குச் செலவழிக்கும் பணத்தில் ஒருசிறுபகுதி...

வறுமையால் கல்லாக்கப் பெற்ற இதயத்தில் எழுந்த அன்பு ஊற்றுக்கூட அடைக்கப் பட்டது........ கூட்டத்தாரை நோக்கினாள்...... குமுறலிடைச் சொன்னாள்... "எட்டணாவுக்கு என் பாலகனை வாங்காவிடில் பாலனுடன் நானும் கிணற்றில் வீழ்ந்திறப்பேன்" என்று.

பரிதாபம் அசைந்தது ..அப் பாலகன் மேற்கொண்ட அன்பால் அல்ல..கிணற்று நீர் கெட்டுவிட்டால் தண்ணீருக்கு என் செய்வது எனச் சிந்தனையிற் சிறுமுள் புகுந்த காரணத்தால்...... பாலகன் எட்டணாவிற்கு வாங்கப்பட்டான்..அவளுக்கு ஒருவேளைச் சோறு......தவிர மற்றொரு உயிரைக் காப்பாற்ற வேண்டிய துயரமும் விட்டது. ......ஆனால் அடுத்த வேளைக்கு அவள் என்ன செய்வாளோ...?

"என்னப்பா ரவி! காரசாரமாக எழுதுவதற்குப் பீடிகையா இக்கதை," என்றார் என் நண்பர் கவிஞர் தமிழரசன்.

"இல்லை தமிழரசே! இது உண்மைச் சம்பவம்தான்" என்று கூறி தீபாவளியன்று நரகாசுரன் அழிந்தான் என்று விழா எடுக்கும் நாளிலே வந்த பாரததேவி தின ஏட்டிலே காணப்பட்ட ஒரு செய்தியைக் காட்டினேன்.

(8-ம் பக்கம் பார்க்க)

தீர்ந்தது கவலை.

(மன்னன்)

"சார்! மேட்டர் ஏதாவது தர்றீங்களா? ஏதாவது இறக்கித் தள்ளுங்க சார்! நாலு தமிழரசு! ரெண்டு சோஷியலிஸம் கலந்து எழுதுங்க!"

—கம்பாசிட்டர் கந்தசாமி

"என்னங்க! ஒண்ணும் "ஓட்டம்" இல்லிங்களே! ஏதோ பத்திரிகை அடிச்சு, ஒரு ஐயாயிரம் காப்பி வித்திச்சு! காலு காசு வந்திச்சு" என்று காணோமே! அட, காசுதான் இல்லே, "லீடிங் டமில் வீக்லி" என்ற பட்டமாவது... உண்டா? தெண்டத்துக்கு அழுவது முடியுமா?"

முதலாளி முத்தப்பசெட்டியார்.

"அவர்தான் குழப்புறாருன்னு கம்பளையும் கொஞ்சம் பிரீயாக விடறதில்லே. ஒரு ஜெய்ஹிந்தைப் போட்டால் கட்டுரை பிச்சு வாரிடாதா? சுத்த வெண்டைக்காய்!"

—சப் எடிட்டர் சண்முகம்.

"பத்திரிகையாம் பத்திரிகை! எட்டு கலர் போட்டு என்ன பண்றது? எழுத்து வெத்து சாக்காயிருக்கே. இந்தப் பெரிய டவுனுக்கு முப்பது காப்பி வருது! அதுலே இண்ணைவரை எழு வித்திருக்கு! டிபாசிட் என்னவோ 25 ரூவா கட்டியாச்சு!"

—பத்திரிகை ஏஜண்ட் பக்கிரி

"தலையங்கத்தைப் படிச்சுப் புரிஞ்சுக்கிறது மூணு பாட்டில் விளக்கெண்ணெய் சாப்பிடற மாதிரி இருக்கு! இந்த அழகில் எட்டுப் பக்கம் 'அரசியல் பிரச்னை'க்கு விளக்கம் தர்ராராம்!"

—வாசகர் வரதராசு

இந்த அர்ச்சனைகளைக் கேட்டுக்கொண்டுதானிருந்தார்

—ஆசிரியர் சேதுபதியார்

இந்தப் பயகளுக்கு நம்ப "விரந்தாத் தமிழன்" மேல் இவ்வளவு எரிச்சலா?......ஆபிசில் நுழைகிறார்! சிடுசிடுப்பைத் தொடர்ந்து அலட்சியப் பார்வை! பேனா ஓடத் தொடங்கிவிட்டது.....

பத்திரிகை வெளிவந்தது.

மூன்றாம் பக்கத்தில் "24 பாயின்ட் டைப்"பில் 'திராவிடர் கழகம் சாதித்ததென்ன? திராவிடராவது ஆரியராவது!" இந்த ரகத்தில் ஆசிரியர் கோமாரிப் பாய்ச்சல் பாய்ந்திருந்தார்!

பத்திரிகை விற்பனைக்குச் சொல்ல வேண்டுமா?

வைத்தியநாதர் வாழ்த்த, அனந்தாச்சாரி அகமகிழ, தம்பிரான் தாராள நன்கொடை செய்ய "விரந்தாத் தமிழன்" பறந்துகொண்டிருந்தான்!

முதலாளிக்கு தீர்ந்தது கவலை! "போலோ சேதுபதிஜிக்கு ஜே!" என்று அவர் கூவவில்லை. கந்தசாமி முதல் வரதராசு வரைக்கும் தீர்ந்தது கவலை!

ஏன்! சேதுபதிக்கும் கூடத்தான்! (விரைவில் பைனான்ஸ் ஏறினாலல்லவா அவர் கடையைக் கட்டிக்கொண்டு "ஆட்டம் குளோஸ்" போடலாம்? "எல்லாம் அப்பன் சேதுபதியின் கிருபை அதாவது ஆங்கிலத்தில் பிசினஸ் டிரிக்"—)

★

(7-ம் பக்க தொடர்ச்சி)

"எந்த ஊரிலே" என்றார் ஒவியர் இராவணன்.

"தனியொருவனுக்கு உணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம்" என்று கவிபாடிய கவியரசு பிறந்த எட்டையாபுரத்திலே......என்றேன்.

ஏன் நடக்காது.....வாழும் வரை வறுமையிலே வாழவைத்துச் செத்தபின் அவர் கவிதையைச் சிதைத்து சிலையும் கோவிலும் எழுப்பும் சிந்தனையற்ற செந்தமிழ் நாட்டில் ஏன் நடக்காது இப்படிப்பட்ட சம்பவங்கள்.........சிந்திப்பார்களா பாரதிக்கு மண்டபங்கட்ட பணங்கொடுத்துதவிய நண்பர்கள்—ஏழைகளின் இன்னல் தீர்த்தால்தான் பாரதியாரின் குறிக்கோள் நிறைவேறுமென்பதை?

மகாத்மா காந்திக்கு சிலையெடுக்கும் மக்கள்—ஏழைகளுக்கு வாழ்வு அளிப்பதே காந்தியின் குறிக்கோள் என்பதைக் கண்டு—சிலை எடுக்கும் நோக்கத்தையும் பொருளையும் வறுமையில் வாடும்—எச்சிலுக்கு நாயுடன் சண்டையிடும்—பிச்சையெடுக்கும் மக்களை ஒன்று கூட்டி அவர்களின் வாழ்விற்கு ஒளியூட்டும் வழியைச் செய்வார்களா?

செத்தார்க்கு மாரடிக்கும் உலகே!
சிதைந்த வாழ்வினர்க்கு
சிறப்பு நல்க மாட்டாயா?

★

இரத்தக் கண்ணீர்

'பூந்தோட்டம்' இதழில் தொடர்கதையாக வந்து, நடுவில் அறுந்துபோன இரத்தக்கண்ணீர் விரைவில் முரசொலியில் வெளிவரும்.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: மு. கருணாநிதி, திருவாரூர்.
அச்சிடுபவர்: கருணை. எம். ஜமால், கருணாநிதி மின்னியக்க அச்சகம், விஜயபுரம்